[19th January 1965

கனம் திரு. வெ. ராமைய்யா: கனம் அங்கத்தினர் அவர்கள் மதுரையில் நடந்த ஒரு சிறு சம்பவத்தைப்பற்றிக் குறிப்பிடு கிறார்கள் என்று நினைக்கிறேன். அங்கு பர்மாவிலிருந்து வந்த வாலிபர்களில் ஒருசிலர், ஏதோ இங்கு ஏராளமாகக் கிடைக்கும் என்று எதிர்பார்த்தது கிடைக்காமல் திரும்பவும் பர்மாவுக்குச் சென்று விடப்போவதாக அறிக்கை விட்டுக்கொண்டிருந்தார்கள். அவர்கள் போனார்களா இல்லையா என்கின்ற விவரம் சர்க்காருக்குத் தெரியாது.

திரு. அ. பெ. தர்மலிங்கம்: பர்மா அகதிகள் விஷயத்தில் பேச்சு வார்த்தை நடத்துவதற்காக நமது மாநிலப் பிரதிநிதிகள் கலந்து கொள்ளவேண்டிய அவசியமில்லை, மத்திய அரசாங்கத்தின் மீது எங்களுக்குப் பரிபூரண நம்பிக்கையிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சமீபத்தில் இலங்கை அகதிகள் பற்றிய பேச்சுவார்த்தை நடந்தபோது இங்குள்ள அமைச்சர் அவர்களையும் அழைத்திருந்தார்கள். அப்படியானால் யாருக்கு யார் மீது நம்பிக்கை குறைந்திருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளலாமா?

Mr. SPEAKER : The question does not arise.

திரு. இரா. நெடுஞ்செழியன்: அவைத் தலைவர் அவர்களே, பர்மா அகதிகளில் யார் யாருக்கு, எவ்வளவு காலத்திற்கு எந்த அளவுக்கு நஷ்ட ஈடு கிடைக்கும் என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

கனம் திரு. வெ. ராமைய்யா: நஷ்டஈடு என்று சொல்லும்போது எல்லோருக்கும் இப்போது நடந்த நிகழ்ச்சிகள் மட்டும்தான் நினைவிற்கு வருகிறது. பர்மா நாடு சுதந்திரம் அடைந்த போதே, ஆரம்பக் கட்டத்தில் பெரும் செல்வந்தர்கள் எல்லாம் தங்கள் நிலத்தை விட்டு விட்டு வந்தார்கள், அப்போது நிலங்களை எல்லாம் அந்த அரசாங்கம் தேசிய மயமாக்கியது. அதைத் தொடர்ந்துதான் சிறிய தொழில்களையும் தேசியமயமாக்குவது என்ற கொள்கையை எடுத்துக்கொண்டார்கள். அதன் காரணமாக சிறு தொழில்களை நடத்திக்கொண்டிருந்தவர்கள் வேறு வேலை களைப்பார்க்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அங்கேயே இன்னும் இருந்து வேறு வேலைகளைப் பார்க்க முடியாதவர்கள்தான் இங்கு திரும்புகிறார்கள். வேறு வேலைகளைப் பார்த்துக் கொண் டிருப்பவர்கள் அங்கேயே இருக்கலாம் என்று அவர்கள் சொல்லு கிறார்கள். இவற்றைப்பற்றி எல்லாம் பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கிறது. எல்லாவற்றிற்கும் சுமுகமான முடிவு காண் பதற்கான எல்லா முயற்சிகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

பாம்பன்—ராமேஸ்வரம் ரஸ்தா பாலம்

* 8 **கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி:** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ராமேஸ்வரத்திற்குச் செல்ல பாம்பன் ரஸ்தா பாலம் அமைக்க உத்தேசமுண்டா?

(இ) ஆமென்றால் எப்போது?

19th January 1965]

கனம் திரு. வெ. ராமைய்யா: (அ) & (இ) ஆம். நான்காம் ஐந்தாண்டு நகல் திட்டத்தில் தேசிய நெடுஞ்சாலைத் திட்ட வேலைகளில் இத்திட்டத்தையும் சேர்க்கும்படி இந்திய அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

திரு. கரு. சீமைச்சாமி: இப்போது இந்தப் பாம்பன் ரஸ்தா பாலத்தை அமைப்பது மிக முக்கியமான விஷயமாக ஆகிவிட்டது என்பது தனுஷ்கோடி சம்பவத்திலிருந்து விளங்குகிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் என்று இல்லாமல் உடனடியாக இதை எற்று நடத்த வேண்டிய எற்பாட்டை சர்க்கார் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா: நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வேலையைத் தொடங்க வேண்டிய பரிபூரண ஆராய்ச்சி வேலையை உடனடியாக எடுக்கவேண்டுமென்று நமது அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

திரு. மீ. கலியாணசுந்தரம்: ஸார், சேதுசமுத்திரத் திட்டம் தொடங்க இருக்கக் கூடிய காரணத்தினால் இந்தப் பாலம் அமைக்க கூடிய வேலை அத்துடன் இணைந்ததாகக் கருதப்படுமா? இல்லையென்றால் ஏதாவது மாறுதல் இருக்குமா?

கனம் திரு. வெ. ராமைய்யா: இந்தப் பாலத்திற்கும் சேது சமுத்திரத் திட்டத்திற்கும் அதிகமாக சம்பந்தம் இருக்க வேண்டிய அவசியம் இல்லை. சேது சமுத்திரத் திட்டம் வந்தாலும் வராவிட்டாலும் இந்தப் பாலம் கட்டித்தான் ஆகவேண்டும். ஆகவே இதைக் கட்டுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

திரு. கரு. சீமைச்சாமி: தலைவர் அவர்களே, மத்திய அமைச்சர் திரு. ராஜ் பஹதூர் அவர்கள் கூட சென்ற மாதம் 26-ம் தேதி வந்து சர்வே வேலையைப் பார்த்து, ரஸ்தா பால வேலையை துரிதமாக ஏற்று நடத்திச் செய்வதாகச் சொல்லி சென்ருர். இப்போது அமைச்சர் அவர்கள் நான்காவது திட்டம் என்று சொல்லுகிருர்களே அதற்குக் காரணம் என்ன?

கனம் திரு. வெ. ராமைய்யா: தேசப் பிரதமர் இந்தப் பாலத்தை அமைக்கவேண்டுமென்று சொன்னவுடனேயே அதை அமைக்க துரிதமாக வேலைகள் நடந்துவருகின்றன.

நடுத்தர வர்க்க மக்களுக்கான சுகாதார இன்ஷூரன்ஸ் திட்டம்

* 9 **கேள்வி.—திரு. இராம. அரங்கண்ணல்:** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

நமது மாநிலத்தில் உள்ள நடுத்தர வர்க்க மக்களுக்கான சுகாதார இன்ஷூரன்ஸ் திட்டம் ஒன்றை ஆரம்பிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: இல்லை.